(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 28.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2024 யூன் 06, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1285/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவகத்தில் பணிபுரியும் இயன் மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயன் மருத்துவரின் பெயர் மற்றும் முகவரி தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி இயன் மருத்துவர்களின் கடமையின் தன்மை யாதென்பதையும்;

(iv) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(v) இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய பின்னடைவைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1700/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவசர பெறுகைத் திட்டத்தின் படி 2022/MSD/V/R/P/0066 ஆம் இலக்க கேள்விப் பத்திரத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்ட முப்பத்திரண்டு (32) வகையான மருந்துகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மருந்து வகைகளுள் விநியோகம் செய்யப்பட்ட மருந்து வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மருந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப்பத்திரத்தை வழங்கும்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடவடிக்கைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மருந்துகளைப் பாவித்தமையால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் பதிவாகியுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளுக்கான அனுப்பாணைக் கோரிக்கை யாரால் சமர்ப்பிக்கட்டது என்பதையும்;

(iii) 2 – 8 பாகை செல்சியசுக்கு இடைப்பட்ட வெப்பநிலையின் கீழ் வழங்கப்பட வேண்டிய சில மருந்துகள் குறித்த கட்டளையினுள் உள்ளடங்கியிருந்த நிலையிலும், மருத்துவ வழங்கல் பிரிவினால் மேற்படி கட்டளைக்கான அனுமதி வழங்கப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1702/2024

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கை பொலிஸில், பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய ஒவ்வொரு பதவியிலும் சேவையாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவியிலும் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி பதவிகளில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

(iv) பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்து பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவி உயர்வு பெற எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

(v) இலங்கை பொலிசுக்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது, தற்போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1727/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை புத்தளம் மாவட்டத்தில் யானை-மனித மோதல் காரணமாக மரணித்துள்ள ஆட்களினதும் காட்டு யானைகளினதும் எண்ணிக்கை, ஒவ்வொரு வனசீவராசிகள் வலயத்திற்கு ஏற்ப தனித் தனியே யாதென்பதையும்;

(ii) புத்தளம் மாவட்டத்தில் நிலவும் யானை-மனித மோதலுக்கு நிரந்தர தீர்வொன்றினைப் பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1737/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச நெற்களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தக்கூடிய நெல்லின் அளவு வெவ்வேறாக யாது;

(iv) 2015ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்படும் நெற்களஞ்சியசாலைகளுக்கு மத்தியில் தற்போது பயன்படுத்தப்படாதுள்ள களஞ்சியசாலைகள் உள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி நெற்களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iv) பயன்படுத்தப்படாதுள்ள நெற்களஞ்சியசாலைகளை மீண்டும் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நெற்களஞ்சியசாலைகளிலிருந்து உச்சப் பயனை பெறுவதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1749/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோயாளிகள் உள்ள குடும்பங்கள் வாழும் வீடுகளை புனரமைப்பதற்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் நிதியுதவி வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அந்நிதியுதவி எவ்வளவு என்பதையும்;

(iii) அந்நிதியுதவியை பெறுவதற்குத் தேவையான தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நிதியுதவியைப் பெறுவதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றளவில் அந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் அந்நிதியுதவி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iv) நிரந்தர வீடு இல்லாத சிறுநீரக நோயாளிகள் உள்ள குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1873/2024

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு, — (1)

(அ) (i) 2020 யூலை 01 முதல் 2020 டிசம்பர் 31 வரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட மற்றும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகளின் பெயர்களை வெவ்வேறாகவும்;

(ii) நீதிபதிகள் வழமையாக இடமாற்றம் செய்யப்படுகையில் பின்பற்றப்படும் வகைமாதிரியான நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக, மேற்குறிப்பிட்ட இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்; மற்றும்

(iii) இன்றேல், மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடமாற்றங்களுக்கான காரணங்கள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1876/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுடைய உடல் நலவியல் நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்தில் அவர்களுக்கு விடாய்க்கால அணையாடைகளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) சகல பாடசாலை மாணவிகளையும் உள்ளடக்கி அவ்வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1908/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வரைவு செய்யப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் 2024 முதல் 2026 வரையான காலப் பகுதியில் வறுமைக்குட்பட்ட மற்றும் மிகவும் வறுமைக்குட்பட்ட 12 இலட்சம் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத்திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1911/2024

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 வரை ஒவ்வொரு ஆண்டிலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் மற்றும் நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

இலங்கை மின்சாரம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பொதுத் தனிசு முகாமைத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய 2364/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சவுதி அரேபிய இராச்சியத்தின் அரசாங்கத்திற்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் நீக்குவதற்கும் வரி செலுத்தாது தட்டிக் கழித்தல் மற்றும் தவிர்ப்பு என்பவற்றைத் தடுப்பதற்குமாக 2023 சனவரி 26 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கையானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75(1) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 2360/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 சனவரி 02 ஆம் திகதிய 2365/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 சனவரி 07 ஆம் திகதிய 2365/84 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 பெப்ரவரி 19 ஆம் திகதிய 2372/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 மார்ச் 01 ஆம் திகதிய 2373/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 123(8) ஆம் பிரிவின் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளார் நாயகத்திற்கு வழமையின் அடிப்படையில் பகிரப்பட வேண்டிய தகவல்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 மார்ச் 21 ஆம் திகதிய 2376/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 7(3), 8, 10, 11 மற்றும் 12 ஆம் பிரிவுகள் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைகள் தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட 2024 ஏப்ரல் 29 ஆம் திகதிய 2382/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2024 யூன் 4) [1].

*13.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பால்நிலைசார் சமத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 (3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் (பதிற்கடமை) விதிக்கப்பட்டு, 2023 செப்டெம்பர் 21 ஆம் திகதிய 2350/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— *சீட்டாட்டத்* தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் *சீட்டாட்டத்* தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் *சீட்டாட்டத்* தொழில் உரிமமளித்தல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 12 ஆம் திகதிய 2366/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— *சீட்டாட்டத்* தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் *சீட்டாட்டத்* தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் *சீட்டாட்டத்* தொழில் உரிமமளித்தல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 02 ஆம் திகதிய 2369/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசத்தில் “பிரத்தியேக புடவை தயாரித்தல் வலயம்” தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மார்ச் 28 ஆம் திகதிய 2377/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2024 மே 21 ஆம் திகதிய 2385/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*31.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*33.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 13 ஆம் திகதிய 2371/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2348/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*36.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*37.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*38.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் உரித்துப் பதிவு தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 01 ஆம் திகதிய 2308/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*39.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*40.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 01 ஆம் திகதிய 2360/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*41.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 8 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 95 மற்றும் 96 ஆம் பிரிவுகளின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி ஆக்கப்பட்டதும், 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*42.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியல்கள் தொடர்பாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2373/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*43.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இங்கு உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டு வகைப்பாடு குறியீடுகள் 1404-90-93 கொண்ட HS குறியீட்டின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற I ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள அழுத்தப்படாத மற்றும் அழுத்தப்பட்ட தென்னை நார் தொடர்பில் அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள அளவின் அடிப்படையில் செஸ் வரி அறவிடப்பட வேண்டுமென்பது குறித்து, விதிக்கப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியமைக் குறித்து 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கம் கொண்ட தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 33 ஆவது பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இப் பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

**அட்டவணை**

| | | ***I ஆம் நிரல்*** | ***II ஆம் நிரல்*** |
|---|---|---|---|
| தலைப்பு இலக்கம் | கூட்டு வகைப்பாடு (HS குறியீடு) | தேங்காய் உற்பத்தி | செஸ் வரி அளவு |
| | 1404-90-93 | பதப்படுத்தப்பட்ட தென்னை நார் (அழுத்தப்பட்ட மற்றும் அழுத்தப்படாத) | கிலோ கிராம் ஒன்றுக்கு 10 சதம் |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

44.

மாத்தறைப் பருவம் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

45.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---